**செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள்**
**முன்னிலை - திரு.ஆ.ர.ராகுல் நாத்., இ.ஆ.ப.,**

**ந.க.எண்7548/2018/பஅ3** **நாள்-29.09.2023.**

**பொருள்.** பணியமைப்பு - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு - செங்கல்பட்டு மாவட்டம்- திரு.ஜி.சண்முகானந்தம் (லேட்) - மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (மண்டலம் -3) இலத்தூர் ஊராட்சி ஒன்றியம் - அவரது வாரிசுதாரர் திரு. ச.ராஜதுரை என்பவருக்கு கருணை அடிப்படையில் ஊர் நல அலுவலர் நிலை-2 ஆக பணிநியமனம் வழங்கி உத்தரவிடப்பட்டது அரசாணை (நிலை) எண்.48 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) துறை நாள் 26.02.2021ன் படி தனியருக்கு ஊர் நல அலுவலர் நிலை-2 நிலையில் பணிவரன்முறை செய்து உத்தரவிடுதல்.

**பார்வை.** 1.காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள்.ந.க.எண் 7548/ 2018/பஅ3 நாள்.23.08.2019.

2.வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) இலத்தூர் ஊராட்சி ஒன்றியம் அவர்களின் கடித ந.க.எண்.893/2018/ஆ1 நாள்.28.09.2018.

3.காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடித ந.க.எண். 7548/ 2018/பஅ3 நாள்.21.05.2020.

4.அரசாணை (நிலை) எண்.48 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை நாள், 26.02.2021.

5.அரசு கடித எண் 6895/இ3/2021-5 நாள்,14.12.2021.

6.அரசு இணை செயலாளர் தலைமைச் செயலகம் சென்னை அவர்களின் கடித ந.க.எண் 14858/இ3/2020-2 நாள்,30.03.2021.

7.தொடர்புடைய ஆவணங்கள்.

*******

உத்தரவு..

செங்கல்பட்டு மாவட்டம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு, இலத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலராகப் பணிபுரிந்து 16.04.2018 அன்று பணியிடை காலமான திரு.ஜி.சண்முகானந்தம் (லேட்) என்பவரின் வாரிசுதாரரான அவரது மகன் திரு.ச.ராஜதுரை என்பவருக்கு பார்வை 1-ல் காணும் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் உத்தரவின்படி கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கப்பட்டு பார்வை 2-ல் காணும் கடிதத்தின்படி சித்தாமூர் ஊராட்சி ஒன்றியத்தில் ஊர் நல அலுவலர் நிலை-2 ஆக 28.08.2019 முற்பகல் (பணிப்பதிவேடு தொகுதி -1, பக்கம் எண் 13) முதல் பணியில் சேர்ந்து தற்போது பணியிட மாறுதலில் மதுராந்தகம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வருகிறார்.

மேற்படி தனியர் கருணை அடிப்படையில் ஊர் நல அலுவலர் நிலை-2 ஆக பணிநியமனம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து இவருக்கு அரசாணை (நிலை) எண்.80

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1)த் துறை நாள்.02.03.2016ல் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின்படி இவரது பணி பார்வை-3ல் காணும் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடித்தின் மூலம் பணிவரன்முறை செய்யக்கோரி கருத்துரு இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்கம் சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

பார்வை-5ல் காணும் ஊரக வளர்ச்சி இயக்குநர் அவர்களின் கடித வழி விதித்தளர்வு தேவைப்படாத கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட நபர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் நிலையில் அரசாணை (நிலை) எண்.48 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ 1) துறை நாள்.26.02.2021ன்படி பணி வரன்முறை செய்திட தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி, கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டு, மதுராந்தகம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வரும் திரு.ச.ராஜதுரை என்பவரது பணியினை ஊர் நல அலுவலர் நிலை-2 பணி நிலையில் 28.08.2019 முற்பகல் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு பணி வரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது.

<u>நிபந்தனைகள்</u>

***தனியர், எவ்வித விதித்தளர்வு மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு ஏதும் தேவைப்படாத நிலையில் உள்ளார் என்ற அடிப்படையில் பத்தி எண் 5.1-ன்படி பணி வரன்முறை செய்யப்பட்டுள்ளது. விதித்தளர்வு அல்லது விதி விலக்கு தேவையென பின்னர் தெரிய வந்தால் இவ்வாணை எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.***

மாவட்ட ஆட்சித்தலைவர்
செங்கல்பட்டு.

29/09/2023

பெறுநர்.

திரு.ச.ராஜதுரை
இளநிலை உதவியாளர்,
மதுராந்தகம் ஊராட்சி ஒன்றியம்,
செங்கல்பட்டு.

நகல்.. இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் இயக்கம், சென்னை.
நகல்.. இணை இயக்குநர் திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, செங்கல்பட்டு.
நகல்.. வட்டார வளர்ச்சி அலுவலகம் (வ.ஊ) சித்தாமூர்/மதுராந்தகம் ஊராட்சி ஒன்றியங்கள், செங்கல்பட்டு.
நகல்.. பஅ3 இருப்பு கோப்பு.